# இயல் : இரண்டு

# இராமலிங்க அடிகளார் மற்றும் ஸ்ரீ நாராயண குருவின் வாழ்வியல்

## 2.1. இராமலிங்க அடிகளார் வாழ்வியல்

### இராமலிங்க அடிகளார் பிறக்கும் போது தமிழகத்தின் சமூக நிலை

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பாதித் தொடக்கத்திலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பாதி முடிவு வரையுள்ள ஒரு நூற்றாண்டுக் காலத்தில் பாரதம் அந்நியர்களின் வேட்டைக் காடாக விளங்கியது. அந்நியர்களின் கருணையில்லா ஆட்சியாளும், தொழிலை அடிப்படையாகக் கொண்ட சாதியத்தாலும், சமய பூசல்களாலும், இயற்கையின் கொடிய பஞ்சத்தாலும் தமிழகம் உட்பட இந்தியா முழுவதும் வறுமையால் வாடியது, மக்கள் ஒருவேளை உணவுக்கு கூட வழியற்றவர்களாக விளங்கினர். மேலும் பிற சமயங்களின் படையெடுப்பால் அழிந்து கொண்டிருந்த பாரத கலாச்சாரத்தைக் காக்கவும், இந்து, முஸ்லீம், கிருஸ்தவ, மற்றும் சீக்கியம் போன்ற சமயங்களிடையே ஒருமைப்பாடுகாணவும், மதங்களிடையே நிலவிய மூட நம்பிக்கைகளை, சாதி வழிப்பட்ட உயர்வு, தாழ்மை மனப்பான்மைகளை போலி வைதிகர்களின் புரட்டுச் சடங்குகளை அடியோடு அழிக்கவும் புரட்சிகரமான சீர்திருத்தவாதிகள் தேவைப்பட்டனர்.

### இராமலிங்க அடிகளாரின் பிறப்பு

தமிழ்நாட்டில் கடலூர் மாவட்டம் சிதம்பரம் வட்டத்தில் சிதம்பரத்திற்கு வடமேற்கே 20 கி.மீ தொலைவில் உள்ள மருதூரில்[1] இராமலிங்க அடிகளார் பிறந்தார். பெற்றோர் இராமையா பிள்ளை, சின்னம்மாள் என்போர் ஆவர்.[2]

இராமையா பிள்ளை மருதூரில் கணக்கர். சின்னம்மையார், பழைய செங்கற்பட்டு மாவட்டத்தில், இன்றைய திருவள்ளூர் மாவட்டத்தில் பொன்னேரியை அடுத்துள்ள சின்னகாவணம் என்னும் ஊரில் பிறந்து வளர்ந்தவர்.[3]

இராமையா பிள்ளைக்கு ஆறாவது மனைவியாக வாழ்க்கைப்பட்டவர் ஐந்து மனைவியரும் மகப்பேறின்றி ஒருவர் பின் ஒருவராக இறக்கவே இராமையா பிள்ளை இவரை ஆறாவதாக மணமுடித்தார். இவர்களுக்கு சபாபதி, பரசுராமன் எனும் இரு ஆண்மக்களும் உண்ணாமுலை, சுந்தரமாள் என்னும் இரு பெண்மக்களும் பிறந்தனர்.[4]

05 – 10 – 1823, சுபானு ஆண்டு புரட்டாசித் திங்கள் இருபத்தோரம் நாள் ஞாயிற்றுக் கிழமை மாலை 5.30 மணியளவில் ஐந்தாவது மகவாக இராமலிங்க அடிகளார் பிறந்தார்.[5] பெற்றோர்கள் பிள்ளைக்கு "இராமலிங்கம்" எனப்பெயரிட்டனர்.[6] பிற்காலத்தில் அவர் தனது வள்ளல் தன்மையாள் "திரு அருட் பிரகாச வள்ளலார்"[7] என்று புகழ் பெற்றார் .

## சிதம்பர தரிசனம்

இராமையா பிள்ளையானவர் ஒருநாள் தமதருமை மிக்க மனைவியாரோடும், மக்களோடும் எல்லாம் வல்ல இறைவராகிய திருச்சிற்றம்பலக் கடவுள் ஆனந்தத் தாண்டவம் பயிலும் அம்பலம் காணச் சிதம்பரம் சென்றார். தமதருமை இளம்குமரர் இராமலிங்கரைக் கரத்திலேந்திக் கொண்டே அம்பலத்தரசை வணங்கினார்.

அவ்வேளை அப்பைய தீஷிதர் எனும் வேதியர் நடராசப் பெருமானுக்குக் கற்பூர ஆராதணை செய்தார். இராமையா பிள்ளையின் கரத்திலிருந்து இராமலிங்கராகிய குழந்தையோ, சிவகாமவல்லி மகிழ்ந்து ஒரு கால் விளங்கக் கனக சபையின் கண்ணே ஆனந்த நடம் பயிலும் நடராசப் பெருமானுடைய

அருளமுதம் ஒழுகும் திரு முகத்தையும் கற்பூர ஜோதியையும் காந்த விழியால் கண்ணிமை கொட்டாது பார்த்துக் கொண்டே இருந்து, காண்போர் அதிசயிக்கக் கலகலவென்று நகை செய்தது. அதனைக் கண்ட அப்பைய தீசிதர் ∀இக்குழந்தை தஅம்பலவாணரின் அருட்குழந்தையே'! என வாழ்த்தி இராமையா பிள்ளையையும் அவர்மனைவி மக்களையும் தம் இல்லத்தில் இருத்தி உபசரித்து அனுப்பினார்.[8]

இராமலிங்கரின் குழந்தைப் பருவத்தில் நிகழ்ந்த இந்நிகழ்வு பிற்காலத்தில் "சத்திய ஞான சபையில் ஜோதி வழிபாட்டை"[9] அவர் ஏற்படுத்தக் காரணமாக அமைந்திருக்கலாம். இதை திருவருட்பா ஆறாம் திருமுறையில் இராமலிங்க அடிகளாரே கூறுகிறார்:

"தாய் முதலோடு சிறிய பருவத்தில் தில்லைத்
தலத்தினிடையே திரைதூக்கத் தரிசித்த போது
வேய்வகை மேல் காட்டாதே என்ற தனக்கே எல்லாம்
வெளியாகக் காட்டிய என் மெய் உறவாம் பொருளே
காய்வகை இல்லாதுளத்தே கனித்த நறுங்கனியே
கனவிடத்தும் நனவிடத்தும் எனைப் பிரியாக்களிப்பே
தூய் வகையோர் போற்ற மணி மன்றில் நடம் புரியும்
சோதி நடத்தரசே என்சொல்லும் அணிந் தருளே "[10] என்கிறார்.

## பொன்னேரி வாழ்க்கை

இராமலிங்கர் பிறந்த ஆறாவது மாதம் இராமையா பிள்ளை காலமானார். சின்னம்மையார் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு தாம் பிறந்த ஊராகிய பொன்னேரிக்குச் சென்றார். சில காலம் குடும்பம் பொன்னேரி சின்ன காவணத்தில் வாழ்ந்தது.[12] பொன்னேரிக்கு குடிபெயர்ந்தது எட்டாந்திங்கள் ஆகும்.[13]

## சென்னை வாழ்க்கை

பொன்னேரிக்கு சென்ற சின்னம்மையார் ஓரிரு ஆண்டுகளே அங்கு வசித்தார். பின்னர் தம் மக்களுடன் சென்னைக்கு குடியேறினார். தமையனார் சபாபதிப் பிள்ளை காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியாரிடம் கல்வி கற்று புராணச் சொற் பொழிவாற்றுவதில் வல்லவராகி அதனாற் கிடைக்கும் வருவாயைக் கொண்டு குடும்பத்தை நடத்தி வந்தனர்.[14] சென்னையில் வசித்த இடம் ஏழுகிணறு வீராசாமிப் பிள்ளை தெருவில் 38 ஆம் எண்ணுள்ள வீடாகும் என்பது குறிப்பிடத்தக்கது.[15]

## கந்தக்கோட்ட வழிபாடு

இராமலிங்கர் பிள்ளைப் பருவத்தில் பள்ளி சென்று பயிலாதும் வீட்டில் தங்காதும் இருந்தார். நாள் தோறும் கந்த கோட்டத்திற்குச் சென்று வழிபடுவதை வழக்கமாகக் கொண்டார்.

கந்தசாமி கோயில் என்று வழங்கப்பட்ட அதனைக் கந்தகோட்டம் என்று வழங்கத் தொடங்கியவர் இராமலிங்க அடிகளே ஆவர்.[16]

தெய்வமணி மாலைப் பாடலில் இறைவனிடம் இராமலிங்க அடிகள் வேண்டுவன,

“ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ஒன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமைவேண்டும்
பெருமை பெறு நினதுபுகழ் பேச வேண்டும் பொய்மை
பேசாதிருக்க வேண்டும்

பெருநெறி பிடித் தொழுக வேண்டும் மதமான பேய்
பிடியா திருக்க வேண்டும்
மருவுபெண் ஆசையை மறக்கவே வேண்டும் உனை
மறவா திருக்க வேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதி வேண்டும் நோயற்ற
வாழ்வில் நான் வாழவேண்டும்
தருமமிகு சென்னையில் கந்தகோட்டத்துள்வளர்
தலம் ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே”[17] என்கிறார்

## நிலைக்கண்ணாடி வழிபாடு

ஒரு நாள் இராமலிங்க அடிகள் கைநிறைய புத்தகங்களோடும் நிலைக் கண்ணாடியோடும் பூஜைப் பொருள்களோடும் அலகிட்டு மொழிகிட்டு வைத்திருந்த மேன் மாடியறையுட் புகுந்தார். உண்ணும் போது தவிர வெளியே வருவதில்லை கண்ணாடி எதிரே அமர்ந்து உண்ணாடினார். இவ்வாறு பல நாட்கள் தியானத்திலிருக்கையில் ஒருநாள் சுவரிலிருந்த கண்ணாடியில் தனிகை முருகன் தோன்றிக் காட்சியளித்தான் என்கிறார்.[18]

இராமலிங்கர் முதன் முதலில் பாடிய தலம் கந்தகோட்டம். பாடிய பாமாலை தெய்வமணி மலை. முதற்பாடல் திருவோங்கு எனும் தொடக்கத்தையுடைய பாடல். முதற் சொல் திருஓங்கு என்பது. அருட் பாடல்களுள் முதன் முதலில் அச்சானது தெய்வமணி மாலையும், கந்தர் சரணப்பத்தும் ஆகும்.[19]

ஓதாதுணர்தல், கந்தகோட்ட வழிபாடு, கண்ணாடியிற் கடவுட்காட்சி, கையேடு படித்தல், கண்ணிச் சொற்பொழிவு, கந்த கோட்டத்தையும் திருத்தணிகையையும்

பாடுதல் ஆகிய இவை இராமலிங்கரது ஒன்பதாம் ஆண்டு முதல் பன்னிரண்டாம் ஆண்டு வரை நிகழ்ந்த நிகழச்சிகளாகும்'[20].

## திருவெற்றியூர் வாழ்க்கை (1835 – 1858)

பண்ணிரண்டாம் அகவையில் முறையான அருளியல் வாழ்க்கையைத் தொடங்கிய இராமலிங்கர் நாள் தோறும் திருவொற்றியூர் சென்று தியாகராஜப் பெருமானையும் வடிவுடையம்மையையும் வழிபட்டு வரத் தொடங்கினார். சென்னையை விட்டு நீங்கிய முப்பத்தைந்தாம் அகவை வரை இருபத்து மூன்றாண்டு காலம் இராமலிங்கர் ஒற்றியூரில் வழிபட்ட வண்ணமிருந்தார். தொழுவூர் வேலாயுதனாரால் வகுக்கப் பெற்ற முதல் திருமுறையிலுள்ள வடிவுடைமாணிக்க மாலையும் இங்கித மாலையும், இரண்டாம் திருமுறையின் பெரும் பகுதியும், மூன்றாம் திருமுறையின் முழுவதும் ஒற்றியூர் வழிபாட்டுக் காலத்தில் ஒற்றியூர் இறைவன் மேற்பாடப் பெற்றவையாகும்.

தொழுவூர் வேலாயுதனார் வகுத்த ஐந்தாம் திருமுறையாகிய திருத்தணிகைப் பதிகங்கள் ஒற்றியூர் வழிபாட்டுக் காலத்திற்கு முன் திருத்தணிகையைக் குறித்தும் அங்கு சென்று வழிபட்டும், சென்னையில் இருந்த வாறும் பாடப் பெற்றவையாம். இக்காலத்தில் இடையிடையே திருவலிதாயம், திருமுல்லைவாயில் முதலிய தலங்களுக்கும் சென்று பாடிப்பரப்பினார்.[21]

## மாணவர்கள்

1849 ஆம் ஆண்டில் தொழுவூர் வேலாயுத முதலியார் இராமலிங்க அடிகளாரிடம் வந்தடைந்து மாணவரானார்.[22] மேலும் இறுக்கம் இரத்தினம் முதலியார், பொன்னேரி சுந்தரம், நரசிங்கபுரம் வீராச்சாமி, காயாறு ஞான சுந்தரம் ஐயர், கிரியா யோக சாதகர், பண்டார ஆறுமுக ஐயா ஆகியோர் பெருமானிடத்தில் பாடங்கேட்டனர். பண்டார ஆறுமுக ஐயா விநாயக புராணம் முழுவதையும் பாடங்கேட்டார். இவர்களுள் தொழுவூர் வேலாயுதனார்

உபய கலாநிதிப் பெரும் புலவர் என்று பட்டம் பெற்றுச் சிறப்புற்றார். திருவருட்பாவைப் பதிப்பித்தார்.[23]

## திருமணம்

பிள்ளைப் பருவத்திலேயே மூவாசையையும் முற்றும் துறந்து துறவொழுக்கம் பூண்ட இராமலிங்க அடிகளார் இல்வாழ்வை விரும்பவில்லை. பாலூண் குழவிப் பருவத்திலேயே இல்வாழ்வில் தமக்கு அருவருப்பு உண்டென கூறுவார். இதில் அருவருப்பு பால் உண்ணும் காலையே உளதால் பிள்ளைப் பருவ முதலே இல்வாழ்வை அருவருத்த இராமலிங்க அடிகளார் உற்றார் வற்புறுத்ததாலும் ஊழாலும் திருமணத்திற்கு இசைய வேண்டியவரானார்.

1850 ஆம் ஆண்டு இருபத்து ஏழாவது வயதில் இராமலிங்க அடிகளாரின் தமக்கை உண்ணாமுலை அம்மையாரின் மகள் தனம்மாளை மணம் புரிவித்தனர். தொட்டுத் தாலி கட்டினார்களேயன்றி இல்லற வாழ்வில் ஈடுபட்டார்களல்லர் இதை திருவருட்பா பாடலிலும் அறிய முடிகிறது.[24]

“இன்னுமிங் கெனை நீ மடந்தையர் முயக்கில்
எய்துவித் திடுதியேல் அதுவுன்
தன்னுளப் புணர்ப்பிங் கெனங்கொரு சிறிதும்
சம்மதம் அன்று நான் இதனைப்
பன்னுவ தென்னே இதில்அரு வருப்புப்
பால் உனும் காலையே உளதால்
மன்னும் அம்பலத்தே நடம்புரி வோய் என்
மதிப்பெலாம் திருவடி மலர்க்கே”[25] என்கிறார்.

இவ்வாறு பிள்ளைப் பருவத்திலேயே இல்வாழ்வை வெறுத்த அடிகளார் பிறர் வற்புறுத்தலாலும், ஊழாலும் திருமணத்திற்கு இசைய வேண்டியவர் ஆனார். ஆனால் தொட்டனன் அன்றிக் கலப்பிலேன் என்பதன் மூலம் பெருமானர் இல்வாழ்வில் ஈடுபாடவில்லை என்பதை திருவருட்பா பாடல் வரிகள் மூலம் அறிய முடிகிறது.

"முனித்தவெவ் வினையோ நின்னருட் செயலோ
தெரிந்திலேன் மோகமே லின்றித்
தனித்தனி ஒரு சார் மடந்தையர் தமக்குள்
ஒருத்தியைக் கைதொடச் சார்ந்தேன்
குனித்தமற் றவரைத் தொட்டனன் அன்றிக்
கலப்பிலேன் மற்றிது குறித்தே
பனித்தனன் நினைத்த தோறும் உள் உடைந்தேன்
பகர்வதென் எந்தை நீ அறிவாய்"[26] என்கிறார்.

## நூல்கள் பதிப்பித்தல்

ஒழிவிலொடுக்கம் (1851)[27], தெண்டமண்டல சதகம் (1855)[28], சின்மய தீபிகை (1857)[29]. ஆகிய மூன்று நூல்களும் சென்னை வாழ்வில் இராமலிங்க அடிகளாரால் பதிப்பிக்கப் பெற்றவை.

## நூல்கள் இயற்றல்

உரைநடை நூல்கள் அரிதாகத் தோன்றத் தொடங்கிய அக்காலத்தில் மனுமுறை கண்ட வாசகம். ஜீவகாருண்ய ஒழுக்கம் என்னும் இரண்டு உரைநடை நூல்களை எழுதியருளினார். மனுமுறை கண்ட வாசகம் 1854 – இல் வெளியாயிற்று. ஜீவகாருணிய ஒழுக்கம் இராமலிங்க அடிகளார் அருட்பெருஞ்ஜோதி நிலை பெற்ற பின்னர் 1879 இல் அச்சாயிற்று.[30]

**படைப்புகள்**

**1.திருவருட்பா**

**2. தனிப்பாடல்கள்**

**1.குடும்பக் கோஷம்**

**2.குருட்டாட்டம்**

**3.குடும்பக் கோரம்**

**4. திருமுருக அகவல்**

**5.திருமுருகப் பாசுரம்**

**6.திருமுருகப் பாசுரங்கள்**

**7.திருமுருகப் பாடல்கள்**

**8.சாற்றுக் கவிகள் ஆகும்.**[31]

**3.விண்ணப்பங்கள் (இறைவனிடத்தில் செய்து கொண்ட உரைநடைகள்)**

**4.கடிதங்கள் – தம் கைப்பட எழுதியவை**

**5.கட்டளைகள்**

**6.பத்திரிகைகள்**

**7.உபதேசங்கள்**

**8.உரைநடை நூல்களாக**

**1.மனுமுறை கண்ட வாசகம்**

**2.ஜீவகாருண்ய ஒழுக்கம்**

**9.உரைகளாக**

**1.தமிழ் என்ற சொல்லுக்கு வரைந்த உரை**

2.பெரியபுராணம் முதற் பாடல் முதல் சொல்லாகிய உலகெலாம் எனும் சொல்லுக்கு வரைந்த உரை

3.ஒழிவிலொடுக்கம் பாயிரவிருத்தி

4.தொண்ட மண்டல சதகத்தின் நூற் பெயரிலக்கணமும், கடவுள் வாழ்த்துப் பாடலுக்குச் செய்த உரை

5. பொன்வண்ண தந்தாதியின் இருபத்தி இரண்டாம் பாடலுக்குச் செய்த உரை

6. வேதாந்த தேசிகரின் குறட்பா ஒன்றுக்கு வரைந்த உரை போன்றவையாகும்.[32]

மேலும் பிறரது நூல்களுக்கும், பதிப்புகளுக்கும் வழங்கிய சாற்றுக்கவிகள், மருத்துவ குறிப்புகள் போன்றவைகளும் இராமலிங்க அடிகளார் படைப்புகள் ஆகும்.

கருங்குழி வாழ்க்கை

ஆரவாரம் நிறைந்த சென்னையில் வாழ்வதையும் குடும்பத்தாரோடு ஒரே வீட்டில் இருப்பதையும் இராமலிங்க அடிகள் விரும்பவில்லை .

அதை திருவருட்பா பாடலில்,

"தேட்டிலே மிகுந்த சென்னையில் இருந்தால்
சிலுகுறும் என்றுளம் பயந்தே
நாட்டிலே சிறிய ஊர்ப்புறங்களிலே
நண்ணினேன் ஊர்ப்புறம் அடுத்த
காட்டிலே பருக்கைக் கல்லிலே புன்செய்க்
களத்திலே திரிந்துற்ற இளைப்பை
ஏட்டிலே எழுத முடியுமோ இவைகள்
எந்தை நீ அறிந்தது தானே"[33] என்கிறார்.

சென்னையில் இருந்தால் உள்ளம் சிலுகுறும் என்று தனது அச்சத்தை இராமலிங்க அடிகளாரின் மேற்கண்ட பாடலால் அறிய முடிகின்றது. இதன் விளைவாகத் தமது முப்பத்தைந்தாம் அகவையில் 1858 ஆம் ஆண்டில் ஒருநாள் சென்னை வாழ்வை நீத்துத் தலயாத்திரையாகப் புறப்பட்டு வழியிலுள்ள தலங்களையெல்லாம் வழிபட்டுக் கொண்டு தில்லையை (சிதம்பரம்) அடைந்தார்.[34]

தில்லையில் இராமலிங்க அடிகளாரைக் காண நேர்ந்த கருங்குழி மணியக்காரர் வேங்கட ரெட்டியார் தம்மூர்க்கு வருமாறு அழைத்தார் இராமலிங்க அடிகளார் கருங்குழி சென்றார்.

1858 இல் கருங்குழிக்கு வந்தது முதல் 1867 இல் தருமசாலையை வடலூரில் ஏற்படுத்தும்வரை கருங்குழியே இராமலிங்க அடிகளார் உறைவிடமாயிற்று.[35]

இக்காலத்தில் அடிக்கடி பெருமானார் சிதம்பரம் சென்று வழிபடுவதை வழக்கமாகக் கொண்டார்கள். திருமுதுகுன்றம், திருவதிகை, திருவண்ணாமலை முதலிய தலங்களுக்கு சென்றும் வழிபட்டார்கள். கருங்குழியில் வசித்தகாலத்தைச் சிதம்பர வழிபாட்டுக் காலம் எனலாம். நான்காம் திருமுறையும், ஆறாம் திருமுறையின் முன்பகுதிப் பதிகங்களும் இக்காலத்தில் பாடப் பெற்றவை ஆகும்.[36]

## சமரச சன்மார்க்க சங்கம்

இராமலிங்க அடிகளார் தம்மைச் சூழ்ந்தொழுகிய அன்பர்களைக் கூட்டி 1865 ஆம் ஆண்டில் சங்கத்தை அமைத்தார். அப்போது அதற்கிட்டப் பெயர் “சமரச வேத சன்மார்க்க சங்கம்” என்பது. பிற்காலத்தில் இப்பெயர் “சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்” என்று மாற்றியமைக்கப்பட்டது.[37] தமது கொள்கைகளைப் பின்பற்றவும் பரப்பவும்இச்சங்கத்தை நிறுவினார்.

## சத்திய தரும சாலை

2.2.1867 (அட்சய ஆண்டு தை மாதம் 22) ல் வடலூர் பார்வதிபுரம் கிராமவாசிகள் நாற்பது பேர் எண்பது காணி நிலத்தை இராமலிங்க அடிகளார் விரும்பத் தானமாக எழுதிக் கொடுத்தனர். 23.5.1867 விரபவ வைகாசி மாதம் 11 வியாழக்கிழமை அன்று அழிபசி தீர்த்தலாகிய ஜீவகாருணிய பேரறத்தை நடத்துவதற்காக வடலூரில் ‘சத்திய தருமச் சாலையை’ இராமலிங்க அடிகளார் நிறுவினார்கள்.[38]

## திருவருட்பா வெளியீடு

இராமலிங்க அடிகள் இயற்றிய திருவருட்பாவை அச்சிட்டு 1867 – ல் வெளிக் கொணர்த்த பெருமை இறுக்கம் இரத்தினம் என்பவரையே சாரும்.

1867 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வெளிவந்த திருவருட்பா முதல் நான்கு திருமுறைகள் பதிப்பின் முகப்பேட்டில் முதல்முதலாகத் “திருவருட்பிரகாச வள்ளாலரென்றும்” சிதம்பரம் இராமலிங்க பிள்ளை அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய “திருவருட்பா” என அச்சிடப்பெற்றது.[39]

ஐந்தாம் திருமுறை 1880 மார்ச்சில் முதல் மாணாக்கர் தொழுவூர் வேலாயுதனாராலேயே வெளியிடப்பெற்றது .[40] ஆறாம் திருமுறை முதற்பதிப்பு 1885 –ல் வேலூர் பத்பநாபர், பெங்களூர் இராகவலு ஆகிய இவரது முயற்சியால் திருச்சி ம.லோகநாதன் என்பவரால் பதிப்பிக்கப் பெற்றது ஆகும்.[41]

## சித்தி வளாகம்

நாளடைவில் தருமச் சாலையில் கூட்டம் பெருகவே அமைதியை விரும்பித் தனித்துறைக் கருதி வடலூருக்குத் தெற்கே ஐந்து கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மேட்டுக் குப்பத்திற்கு இராமலிங்க அடிகள் சென்று அங்கே உறையத் தொடங்கினார். மேட்டுக் குப்பத்தில் இராமலிங்க அடிகள் உறைந்தத் திருமாளிகைக்குச் சித்தி வளாகம் என்று பெயர். இப்பெயர் பெருமானாரே இட்டது. சித்தியைத் (வீடு பேற்றைத்) தரும் இடம் என்பது இதன் பொருள். 1870 முதல் 1874 இல் சித்தி பெறும் வரை இங்கேயே உறைந்தார் அருட்பெரும்ஜோதியாய் சித்தி பெற்றதும் இத்திருமாளிகையிலேயே ஆகும்.[42]

## சத்திய ஞான சபை

கடவுளை ஒளி (அருட்பெருஞ்ஜோதி) வடிவிற் கண்ட பெருமானார் ஒளி (அருட்பெருஞ்ஜோதி) வழிபாட்டிற்கென வடலூரில் “சத்திய ஞான சபையை” அமைத்தார்கள். 1871 பிரசோற்பத்தி ஆண்டில் சபை கட்டத் தொடங்கப்பெற்றது.

25.1.1872 பிரசோற்பத்தி தை, 13 வியாழக்கிழமை பூச நாளில் முதன் முதலாகச் சபையில் வழிபாடு தொடங்கப் பெற்றது.[43]

## சன்மார்க்கக் கொடி

முன்னைய ஞானிகள் எவரும் தம் கொள்கைக்குத் தனிக்கொடி கண்டதில்லை வள்ளற் பெருமானார் ஒருவரே தமது மார்க்கத்திற்குத் தனிக்கொடி கண்டவர்கள். கொடி கட்டிக் கொண்டோம் மென்று சின்னம்பிடி என்று பாடியவர்கள். இராமலிங்க அடிகளார் கண்ட கொடிக்குச் சன்மார்க்கக் கொடி என்று பெயர். மஞ்சள், வெள்ளை ஆகிய இரு நிறங்களை கொண்ட சன்மார்க்கக் கொடியை மேட்டுக் குப்பம் சித்தி வளாகத் திருமாளிகையில் 22.10.1873 ஸ்ரீ முக ஆண்டு ஐப்பசித் திங்கள் 7 ஆம் நாள் செவ்வாய்க் கிழமை காலை

8 மணிக்கு முதன் முதலாக கட்டிக் காட்டி நீண்ட உபதேசம் ஒன்றையும் செய்தருளினார்கள். இராமலிங்க அடிகளார் முடிந்த முடிபான கொள்கைகளைக் கொண்ட அவ்வுபதேசம் மஹோபதேசம் (பேருபதேசம்) என வழங்கப் பெறுகின்றது.[44]

## மரணமிலாப் பெருவாழ்வு

சன்மார்க்கத்தின் முடிவு சாகாதிருப்பதே, "சாகாதவனே சன்மார்க்கி" என்பது இராமலிங்க அடிகளாரின் உபதேசம். 'என் மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கந்தானே "துஞ்சாத நிலை யென்று சுத்த சன்மார்க்கச் சூழலிலுண்டது சொல்லளவன்றே". என்கிறார்.

இராமலிங்க அடிகளார் சுத்ததேகம், பிரணவ தேகம், ஞானதேகம் எனும் மூவகைத் தேக சித்திகளையும் பெற்றவர்கள். தேகசித்தி பெற்றார் உடம்புகள் நிலத்தில் வீழா. அவை வெளியாய் அருளில் கலக்கும். அவர்கள் இறைவனோடு இரண்டறக் கலப்பர். அவர்களுக்கு இனிப் பிறப்பு இல்லை இப்பிறப்பில் பெற்ற தேகமே இறுதித் தேகம். இனி ஒருதேகம் எடுப்பதில்லை. இதுவே நித்திய தேகம் ஆகும்.[45]

1873 ஆம் ஆண்டு ஐப்பசித் திங்களில் இராமலிங்க அடிகளார் சித்திவளாகத்தில் கொடிகட்டி உபதேசகத்தை செய்தருளினார். அடுத்த கார்த்திகை திங்களில் தமது அறையிலிருந்த விளக்கை அறைக்கு வெளியே வைத்து அதனை வழிபட்டு வருமாறு அன்பர்களுக்கு கட்டளையிட்டுக் கதவை மூடிக்கொண்டு அறைக்குள்ளேயே இருக்கலானார். திருவிளக்கை வெளியே வெளியில் வைத்து.[46]

தனது அன்பர்களிடம் இதைத் தடைபடாது ஆராதியுங்கள். இந்தக் கதவைச் சாத்திவிடப் போகிறேன் இனிக் கொஞ்ச காலம் எல்லோரும் ஆண்டவர் இப்போது தீப முன்னிலையில் விளக்குகிற படியால் உங்களுடைய காலத்தை வீணிற் கழிக்காமல். "நினைந்து நினைந்து"என்னும் தொடக்கமுடைய உ அ பாசுரமடங்கிய பாடலிற்

கண்டபடி தெய்வ பாவனையை இந்தத் தீபத்திற் செய்யுங்கள். நானிப் போது இந்த உடம்பிலிருக்கிறேன். இனி எல்லா உடம்பிலும் புகுந்து கொள்வேன். என்று திருவாய் மலர்ந்தருளினார்.[47]

இராமலிங்க அடிகளார் தமது அறையிலிருந்து அன்று வெளியே எடுத்து வைத்த திருவிளக்கு இன்றும் எரிந்து கொண்டிருக்கிறது. ஞானசபை பூட்டப் பெற்று வழிபாடு நின்று போகவே சன்மார்க்க அன்பர்கள் சித்தி வளாகத்தில் இத்திருவிளக்கைப் பெருமானின் கட்டளைப்படி வழிபாடு செய்துவந்தனர். இராமலிங்க அடிகளார் தனது திருவறைக்குள்ளேயே இருந்து, விரைவில் இறைவனோடு கலப்பதற்கான சாதனைகளில் ஈடுபட்டிருந்தார். பல நாள் உள்ளே இருப்பதும் சில நாள் வெளியே வருவதுமாக இருந்தார். கார்த்திகை, மார்கழி இரண்டு மாதங்கள் கழிந்தன.[48]

தைத்திங்கள் 19 ஆம் நாள் 30-01-1874 ஆம் ஆண்டு வெள்ளிக் கிழமை பூசத்தன்று முன்னிரவில் இராமலிங்க அடிகளார் அங்கிருந்த அன்பர்களை எல்லாம் அழைத்துத் தாம் அறைக்குள்ளே சென்று உடம்பை மறைத்துக் கொள்ளப் போவதைக் கூறினார்.[49]

நான் உள்ளே பத்துப் பதினைந்து தினமிருக்கப் போகிறேன் பார்த்து அவநம்பிக்கையடையாதீர்கள். ஒருகால் பார்க்க நேர்ந்து பார்த்தால் யாருக்கும் தோன்றாது வெறு வீடாகத்தானிருக்கும் படி ஆண்டவர் செய்விப்பர். என்னைக் காட்டிக் கொடார்.[50] தான் உடம்புடன் மறைந்து விடுவதையே இவ்வாறு கூறுகிறார்.

அன்று இரவு 15 நாழிகை (12 மணி)க்குப் பெருமான் அங்கிருந்த அனைவர்க்கும் இதுகாறும் நாம் கூறி வந்தபடி ஒழுகி அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை வழிபட்டு உய்யுங்கள் என்று அறிவுரையும் வாழ்த்தும் கூறித் தமது திருவறைக்குள் நுழைந்து கதவைத் திருக்காப்பிட்டுக் கொண்டு இரண்டரை நாழிகையில் சித்தி பெற்றார். ஜோதிமயமனார். அருட்பெருஞ்ஜோதிமயமாகி அருளினார்.[51]

இதை அவர் திருவருட்பா பாடலில்,

"என்சாமி எனதுதுரை என்உயிர்நா யகனார்
இன்றுவந்து நான்இருக்கும் இடத்தில்அமர் கின்றார்
பின்சாரும் இரண்டரைநா ழிகைக்குள்ளே எனது
பேருடம்பில் களந்துளத்தே பிரியாமல் இருப்பார்
தன்சாதி உடையபெருந் தவத்தாலே நான்தான்
சாற்றுகின்றேன் அறிந்திதுதான் சத்தியம்சத் தியமே
மின்சாரும் இடைமடவாய் என்மொழிநின் தனக்கே
வெளியாகும் இரண்டரைநா ழிகைகடந்த போதே"[52].

"இங்ஙனம் எல்லாம் வல்லவர் ஓதுக என்ற படி உரைத்துள்ளேன்"[53] என்று இராமலிங்க அடிகள் தம் கைப்பட ஒரு குறிப்பையும் எழுதிவைத்தார். அப்போதைய தென்னாற்காடு மாவட்ட கலெக்டர் ஜே.எச். ஹஸ்டின் எழுதிவைத்த குறிப்பிலும் 1874 ஆண்டு மே மாதம் அவர் முன்னிலையில் கதவு திறக்கப்பட்டது ஆனால் அறை வெற்றறையாகவே இருந்தது என்பதை அறிய முடிகின்றது.[54]

## 2.2. ஸ்ரீ நாராயண குருவின் வாழ்வியல்

### ஸ்ரீ நாராயண குரு பிறக்கும் போது கேரளத்தின் சமூக நிலை

இந்திய வரலாற்றில் 1600 ஆம் ஆண்டில் வியாபாரம் நடத்த வந்த ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி, சிறுகச் சிறுக பல மாநிலங்களில் தங்களின் ஆங்கில ஆட்சியின் கொடியை ஏற்றினார்கள். பல்வேறு மாநிலங்களை அரச குடும்பத்தினர் ஆட்சி செய்து வந்தனர். கேரள மாநிலத்தை திருவாங்கூர் மார்த்தாண்டவர்மா மகாராஜா என்பவர் ஆண்டு வந்தார். இவர் காலத்தில் தான் மக்களின் நலன் கருதி ஓரளவு சட்டங்கள் கொண்டு வரப்பட்டன. 1855 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24 ம் தேதி திருவிதாங்கூரில், அடிமை

வியாபரத்தை தடை செய்து மகாராஜா ஓர் உத்தரவைக் கொண்டு வந்தார். அடிமை வியாபாரம் என்பது கேரள மாநிலத்தில், தாழ்த்தப்பட்டவர்கள் என்றழைக்கப்படும் பறையர், புலையர் போன்றவர்களை, சந்தையில் மாடுகளை விற்பதும், வாங்குவதும் போல நடைமுறையில் இருந்து வந்ததாக அறியமுடிகிறது.

அடிமை வியாபாரம் எந்த அளவுக்கு இருந்ததோ அதைவிட அதிகமாக தீண்டாமைக் கொடுமை இருந்தது. சவர்ணர்கள் என்பவர்கள் பிராமணர், நம்பூதிரிகள் (சத்திரியர்) மேல்சாதி என்றும், அவர்ணர்கள் என்பவர்கள் நாயர், ஈழவர், புழையர், பறையர், நாயாடி என்பவர்கள் கீழ்சாதிகள் என்றும் பிரிக்கப்பட்டு இருந்தனர். அவர்ணர்கள் ஆலயத்தில் இறைவனை வணங்குவதற்கு ஆலயத்தில் இருந்து சில அடி தூர வித்தியாசத்தில் ஒதுக்கிவைக்கப்பட்டனர். ஆலயத்தின் தூய்மையை காப்பதற்கு என்று,

| | | |
|---|---|---|
| நாயர் | – | 16 அடியும் |
| ஈழவர் | – | 32 அடியும் |
| புழையர் மற்றும் பறையர் | – | 64 அடியும் |
| நாயாடிகள் | – | பிராமணர்களை பார்க்க கூடாது பார்த்து விட்டால் பிராமணர்களின் புனிதம் கெட்டுவிடும்[55] |

எனவே இவர்கள் இரவில் மட்டும் நடமாட வேண்டும் என்ற கொடிய நடைமுறை இருந்து வந்தது.

மனிதனின் அடிப்படை உரிமைகளில் ஒன்று நடமாடும் உரிமை ஆனால் அவர்ணர்கள் என்றழைக்கப்படும் கீழ் ஜாதிகாரர்கள் அவர்களால் அமைக்கப்பட்ட சாலையில் நடப்பதற்கு உரிமை மறுக்கப்பட்டது.[56]

மேலும் அவர்கள் மீது வரிகள் விதிக்கப்பட்டது,

| | | |
|---|---|---|
| தரையைவரி | – | நெசவு தொழிலுக்கு வரி |
| வலையரா | – | மீன்பிடிக்கும் படகு மற்றும் வலைக்கு வரி |
| சாக்குவரி | – | எண்ணை எடுக்கும் செக்குக்கு வரி |
| தலைவரி | – | அவர்ணர் எனும் மக்கள் தங்கள் தலைக்கு வரிசெலுத்த வேண்டும். |
| முலக்காரம் (Breast Tax) | – | பெண்கள் தங்கள் மார்பின் அளவுக்கு தகுந்தார் போல் வரி செலுத்த வேண்டும்[57] |

எந்த நாட்டிலும் இல்லாத அளவில் கொடுமையான முறையில் தாழ்த்தப்பட்ட மக்கள், தலைவரியும், மார்பகவரியும் விதிக்கப்பட்ட கொடுமை கேரள மாநிலத்தில் நடைமுறையில் இருந்தது. வரி வசூலிகின்ற அதிகாரிகளின் தொல்லை தாங்க முடியாமல் சேர்தலை வட்டத்தை சேர்ந்த ஒரு ஈழவ பெண் அவள் தன் இருமார்புகளையும் அறிந்து. வாழையிலையில் வைத்து வரி வசூலிக்கின்ற அதிகாரிகளிடம் கொடுத்தார் என்றும், அந்த பெண் வாழ்ந்த இடம் இன்றும் முலைச்சிப் பறம்பு என்று அழைக்கப்பட்டு வருகின்றது. மேலும் பெண்கள் மேலாடை அணிய உரிமைகிடையாது.[58]

சுவாமி விவேகானந்தர் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் சுற்றுப்பயணம் செய்து விட்டு இந்த மலபாரிகள் அனைவரும் சரியான பைத்தியக்காரர்கள், அவர்களது இல்லங்களும் சரியான பைத்தியக்கார விடுதிகள். இந்தியாவிலுள்ள அனைத்து இன மக்களும், இவர்கள் தங்களது போக்கை மாற்றிக் கொள்ளாவிட்டால் இகழ்ந்து பரிகாசிப்பார்கள் என்று கூறுகிறார்.[59]

## பிறப்பு

ஸ்ரீ நாராயணகுரு 1854[60] ஆம் ஆண்டு திருவனந்தபுரத்திற்கு வடக்கில் 10மைல்கள் தொலைவில் செம்பழந்தி என்ற கிராமத்தில், வயல்வரம் வீட்டில் பிறந்தார்.[61] ஸ்ரீ நாராயண குருவின் தந்தை மாடன் ஆசான், தாய் குட்டி அம்மை[62] ஆவார். பிறந்த குழந்தைக்கு நாராயணன் என்று பெயரிடப்பட்டது.[63] நாராயணன் என்று பெயரிடப்பட்டாலும் நாணு என்றே அழைக்கப்பட்டு வந்தார்.[64]

ஸ்ரீ நாராயண குருவின் தந்தை மாடன் ஆசான், தமிழ், மலையாளம், சமஸ்கிருதத்தில் புலமை உள்ளவராக இருந்தார். இவர் இக்கிராமத்தில் ஆசிரியராகவும் விளங்கினார்.[65] ஸ்ரீ நாராயண குருவின் தாய் குட்டி அம்மை அன்பும், பண்பும், கடவுள் பக்தியும் கொண்டவராக விளக்கினார்.[66]

## கிராம வாழ்க்கை சூழல்

நாணுவின் மாமன்கள்லான இராமன் வைத்தியரும், கிருஷ்ணன் வைத்தியரும் ஆயுர்வேத மருத்துவத்தில் திறமை பெற்று இருந்தனர். அக்காலத்தில் ஆயுர்வேத மருத்துவம் வசதி படைத்தவர்களுக்கே உரியதாக இருந்தது. கிருஷ்ணன் வைத்தியர் அந்த நிலையை மாற்றப் பாடுபட்டார். சமுதாயத்தில் பின் தங்கிய நிலையில் இருந்த மக்களுக்கும் ஆயுர்வேத மருத்துவம் கிடைத்திட கிருஷ்ணன் வைத்தியர் வழிவகை செய்தார்.[67]

ஸ்ரீ நாராயண குரு தன் மாமா கிருஷணன் வைத்தியரிடமே ஆயூர்வேத மருத்துவத்தை கற்றுக் கொண்டார்.[68] ஸ்ரீ நாராயண குரு இளமை காலத்தில் மணக்கல் பகவதி அம்மனை வழிபாடு செய்தார்.[69] இதனால் பக்த நாணு என்று அழைக்கப்பட்டார்.[70]

## இளமை கால நிகழ்ச்சிகள்

தீண்டத்தகாதவர்கள் என்று அழைக்கப்பட்ட கீழ்சாதி மக்கள் எவராவது, எங்காவது வீட்டிற்கு வெளியே நிற்பதை நாணு பார்த்து விட்டால் ஓடோடிச் சென்று அவர்களைத் தொட்டு விட்டு அப்படியே வீட்டிற்குள் சமையல் அறை வரை ஓடுவார். இப்படிப்பட்ட இவரது இளமைக் காலநிகழ்வு ஏற்றத் தாழ்வினையும், ஜாதிப் பிரிவினையையும் போக்கிட வேண்டுமென்ற இலட்சிய எண்ணத்தை உருவாக்கியது.[71]

நாணுவுக்கு ஆறு வயது இருக்கும் போது அவருடைய உறவினர் ஒருவர் இறந்து விடுகின்றார் இது நாணுவுக்கும் அவர் உறவினர்களுக்கும் மிகுந்த மன வருத்தத்தை ஏற்படுத்தியது. பூத உடலை தகனம் செய்தனர்.

அந்திமக்கிரியைகள் எல்லாம் முடிந்தன. மறுநாள் நாணுவை காணவில்லை. உறவினர்கள் பல இடங்களில் தேடியும் நாணுவைக் காணவில்லை. காட்டில் தனியாக உட்கார்ந்திருப்பதை கேள்விப்பட்டு உறவினர்கள், பெற்றோர்கள் அனைவரும் ஓடிச் சென்று நாணுவைத் தூக்கிக் கொண்டு வீட்டிற்கு வந்தனர். ஏன் இப்படிச் செய்தாய் என நாணுவைக் கேட்டனர்.[72]

நேற்று இங்கு ஒரு மரணம் ஏற்பட்ட போது, நீங்கள் அனைவரும் அழுது மிகவும் கவலையாக இருந்ததைக் கண்டேன் ஆனால் இன்று நீங்கள் அனைவரும் சிரித்து மகிழ்ந்து கொண்டிருப்பதையும் கண்டேன்,அதைப் பார்த்த பின் தான் நான் காட்டிற்குச் சென்று தனியாக இருந்தேன் என்று கூறினார்.[73]

உறவினர்கள் இறந்த பின்பு அவர்களை மறந்து விடுவதையும் இறந்தவர்களின் நிலைகுறித்தும் நாணு சிந்திக்க தொடங்கினார்.

ஒருநாள் நாணு தனது நண்பர்களுடன் பள்ளியிலிருந்து வீட்டிற்கு வந்து கொண்டிருக்கும் போது. வழியில் காவி உடை அணிந்த துறவியை, பள்ளி மாணவர்கள் பார்த்து சிலர் கேலி செய்தனர். ஒரு சிலர் துறவியின் மீது கற்களை வீசினார்கள். இப்படிப்பட்ட கொடுமையான செயல்களை கவனித்து கொண்டிருந்த நாணு மிகவும் வேதனைப்பட்டார். கண்ணீர் விட்டு அழுதார்.

துறவியை இப்படிக் கொடுமை செய்கின்றார்களே என நினைத்து அழுதார். நாணு அழுவதைப் பார்த்த நண்பர்கள் கல் எறிவதை நிறுத்தினர். அந்த துறவி நாணுவை தோளில் சுமந்து வீட்டில் சேர்த்தார். மேற்கண்ட துறவி நாணுவை நினைத்து மனம் மகிழ்ந்தார்.[74]

நாணுவிற்க்கு இளமையிலையே பிறர் மீது அன்பு, கருணை இருந்திருக்கின்றது மேலும் அதை அவர் வளர்த்துக் கொண்டார்.

### கல்வி

நாணுவின் முதல் ஆசிரியர் அவருடைய தந்தை மாடன் ஆசான் ஆவார்.[16] பின்னர் நாணுவிற்க்கு கல்வி கற்பிக்கும் வயது வந்தது. செம்பழந்தி கிராமத்தில் முத்தாப் பிள்ளை என்ற ஆசிரியர் இருந்தார்.[76]

அவர் சிறந்த கல்வியாளர். முத்தாப்பிள்ளையிடம் கல்வி கற்கத் தொடங்கிய நாணு. ஒரு தரம் கேட்ட பாடத்தை மறந்ததில்லை .அதன் பொருளையும் எளிதில் புரிந்து கொண்டார். அமரம் முதலான சமஸ்கிருத நூல்கள் தமிழ்க் காப்பியங்களையும் கற்றுத் தேற்ந்தார்.[77]

நாணு மேலும் ஸ்ரீ ராமோதந்தம். ரகுவம்சத்தின் சில பகுதிகள். சித்தரூபம், அமரகோசம், குமாரசம்பவம், இத்தியாதி போன்ற நூல்களையும் படிக்க துவங்கினார்.[78]

1876 முதல் 1879 ஆண்டு வரை நாணு இராமன்பிள்ளை ஆசான் என்பவரிடம் கல்வி பயின்றார். தனது இருபத்திரெண்டாவது வயதில் புதுப்பள்ளி எனும் பள்ளிக்கு தனது கல்விப் பயணத்தை துவங்கினார். மூன்று ஆண்டுகள் புதுப்பள்ளியில் பயின்றார்.[79] கிருஷ்ணன் வைத்தியர் நாணு தங்குவதற்கு வாரணபள்ளியில் ஏற்பாடு செய்து கொடுத்தார்.[80]

சமஸ்கிருத மொழியில் காப்பியம், சாஸ்திரம், தர்க்கம் மற்றும் இலக்கணம் ஆகிய துறைகளில் தன் புலமையை வளர்த்துக் கொள்ள இராமன் பிள்ளையிடம் கல்வி பயின்றார். ஆன்மீகத் துறையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட நாணுவிடம் இளமையிலையே ஞானிகளுக்கு காணப்படும் நல்ல குணங்கள் காண முடிந்தது.[81] நாணு வாரண பள்ளியில் சுய கட்டுப்பாடும், ஆழ்ந்த தியானத்தையும் கடைப்பிடித்தார்.[82]

நாராயண குரு போற்றுதற் குறிய பகுப்பாய்வு மற்றும் தவறினை சுட்டிக்காட்டும் மனதையும் பெற்றிருந்தார். ஆனால் தன்னை ஆழ்ந்த கடவுள் நம்பிக்கையிலும் ஈடுப்படுத்தி கொண்டார். அதிகப்படியான தர்கவியல் கூறுகள் ( Logical – Chopping ) அவரை மகிழ்விக்கவில்லை.

அறிவார்ந்த அல்லது எண்ணத் தேடல்களுடனான எந்தவிவாதத்திலிருந்தும் அவர் அமைதியாய் இருந்தார். எப்படி இருந்தாலும் அவர் விவாதங்களை தவிர்த்து விட்டு தன்னை குறித்த உணர்தலுக்காக நீண்ட நேரம் தியானத்தில் இருந்தார். இதனால் இந்த உலகம் குறித்த புதிய மெய்யுணர்வை பெற்றார். அந்த மெய்யுணர்வு என்பது மூர்க்கமான உண்மை ஆகையால் இயந்திரத்தனமாக செயல்பாடுகள் அதில் இல்லை. அந்த அகவுலகம் அவருக்கு புதிய வாசலை திறந்து விட்டது.[83]

சமஸ்கிருதம் கற்பதற்காக இவர் வாரணப் பள்ளி சென்ற போது தான் முதன் முதலாக விசுவநாதர் கோயிலுக்குச் செல்லும் நல்ல வாய்ப்புக் கிடைத்தது. விசுவநாதர் கோயிலுக்கு அதன் பின்னர் செல்லும் வாய்ப்பு தொடர்ந்து கிடைத்து வந்தது. எனவே, ஆராதனைகளில்

கலந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. அப்போது தான் ஒரு ஞானிக்குரிய ஆன்மிக எண்ணங்கள் மலர்ந்தன என்று கூறுலாம்.[84]

நாணுவுக்கு இளம் வயதில் கிருஷ்ண பகவான் மீது பக்தி இருந்திருக்கிறது. இதை அவர் தன்னுடைய நண்பர் அய்யாக் குட்டியிடம் கூறுவதில் இருந்து அறிய முடிகிறது. வாரணப் பள்ளியிலிருந்து குன்னூர் கோவிந்தப் பணிக்கர் என்பவரிடம் சென்றார்.[85]

நாணு அந்த ஆசானிடம் தியானம், யோகம், பிராணயாமம் முதலானவற்றில் பயிற்சி பெற்றார். அங்கிருந்த பொழுது நாணுவுக்கு மூல நோய் வந்தது. மாமா கிருஷ்ண வைத்தியர் அதனை குணப்படுத்தினார்.[86]

## தமிழ் நூல்கள் கற்றல்

திருவனந்தபுரத்தில் ஒரு தமிழ் புத்தகக்கடை இருந்தது. அதன் உரிமையாளர் நாணுவுக்கு மிகவும் நெருங்கியவர் ஆனார். நாணுவின் கற்கும் ஆவலைக் கண்ட அந்த உரிமையாளர் தனது கடையில் இருந்த நூல்களை நாணு எடுத்துப் படிக்க அனுமதி அளித்தார். அந்தக் கடையிலேயே அமர்ந்து தமிழ் நூல்களைப் படித்து வந்தார் நாணு.[87]

சித்தாதங்கள், புராணங்கள், இதிகாசங்கள் முதலான புத்தகங்களைப் படிக்கும் வாய்ப்பினைப் பெற்றார். திருக்குறள், திருமந்திரம், திருப்புகழ், திருப்பாவை, ஒழிவில் ஒடுக்கம், சிவபுராணம் ஆகிய நூல்களை ஆழ்ந்து படித்தார்.[88]

## நாணு ஆசான்

நாணு தனது உயர் கல்வியை முடித்துவிட்டு அஞ்சு தேங்கு அருகில் மீரான் கடவு எனுமிடத்தில் கடக்காவூரில் இளம் குழந்தைகளுக்கு பாடம் கற்றுக் கொடுக்கத் தொடங்கினார். அன்றிலிருந்து நாணு ஆசான் என்று அழைக்கப்பட்டார்.[89]

தாழ்த்தப்பட்ட இனத்தை சார்ந்த குழந்தைகளை அழைத்து வந்து கல்வி போதித்தார். இதனால் அவருக்கு பல எதிர்ப்புகள் உருவாகின. எதிர்கின்றவர்களை அழைத்து தாழ்த்தப்பட்ட மாணவர்களும் நன்றாக படித்து நல்ல முறையில் வாழ்ந்தால் நமக்கும் பெருமைதானே நமது வாழ்க்கையும் நலமாக அமையும் என்றார்.[90]

## திருமணம்

அக்காலங்களில், இளமைத் திருமணம் நடைமுறையில் இருந்து வந்தது.குழந்தை பிறந்த உடனே இன்னார்க்கு இவர் தான் என குறிக்கப்பட்டு அதைப் போலவே திருமணங்கள் நடைபெற்றன. பால்ய திருமண முறை நடைமுறையில் இருந்து வந்த காலம் அது.[91]

இதன்படி நாணு ஆசானுக்கு நாணுவின் தாய் மாமா கிருஷ்ண வைத்தியரின் மகள் காளியம்மாவைத் திருமணம் செய்ய வேண்டும் என்று முடிவு செய்தனர்.காளியம்மாவை காளிக்குட்டி என்றும் அழைப்பார்கள்.[92]திருமணம் குறித்து நாணுவின் சம்மதத்தை எவரும் கேட்கவில்லை. திருமண நாளும் நிச்சயிக்கப்பட்டது. முதல் நாள் இரவு நாணு வீட்டை விட்டு வெளியேறி விட்டார்.

மணமகனின் சகோதரி மணப்பெண்ணின் வீட்டிற்குச் சென்று. மணப் பெண்ணுக்கு முண்டு (சேலை) கொடுத்து அழைத்து வருவது அக்கால மரபு. அம்மரபின் படி நாணுவின் சகோதரி. காளிக்குட்டிக்கு முண்டு கொடுத்து, மாடன் ஆசான் வீடான வயல்வார வீட்டுக்கு அழைத்து வந்துவிட்டார்.

மணமகளை மணமகன் வரவேற்க்கும் ஒரு சடங்கு நடைபெறுவது அக்காலத்தில் உண்டு. நாணு இல்லம் திரும்பாததால் அச்சடங்கு நடைபெறவில்லை என அறிய முடிகிறது.[93] கேரளத்தில் புடவைக் கொடை என்பது இப்போதும் வழக்கத்தில் உள்ளது.[94]

அக்கால வழக்கப்படி மணமகன் தாய் வீட்டில் தான் தங்க வேண்டும் காளிக்குட்டியும் அடுத்த நாள் தாய் வீட்டிற்கு சென்று விட்டார்[95]. சில நாட்களுக்குப்பின் நாணு ஆசான் வீட்டிற்கு திரும்பி வந்ததும் தன் சகோதரிகளை கோபித்துக் கொண்டார். அப்பாவின் சகோதரி மகள் எனக்கு சகோதரி தானே.[96] என்று கூறிவிட்டு பின்பு பெண் வீட்டிற்குச் சென்று காளிக்குட்டியிடம்.

இந்த உலகத்தில் பிறக்கும் மக்களெல்லாம் மாறுப்பட்ட கருத்துடையவர்கள். நீயும் நானும் வேறுபட்ட பாதையில் செல்பவர்கள். உன்னை விரும்புகிறவனுக்கு நீ நல்லது செய்யக் கூடும். என்னைப் பின்பற்றுகிறவர்களுக்கு நான் நல்லது செய்யக் கூடும். உலகில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு லட்சியத்துக்காகப் பிறக்கின்றனர். நான் ஒரு லட்சியத்துக்காக என்னை அர்பணித்திருக்கிறேன். என் விருப்பத்தை அறியாமல் உன்னை இங்கே அனுப்பியுள்னர். நான் உன்னை சகோதரியாக நினைக்கின்றேன் நான் என் லட்சியத்தை நோக்கிச் செல்கின்றேன் என்று கூறிச் சென்றுவிட்டார்.[97]

வீட்டை விட்டு விலகிய நாணு நேராக அகஸ்திய மலைக்குச் சென்றார். பிறகு அங்கிருந்து கொடிய இரவில், கடுமையான காட்டினைக் கடந்து முடிவில் கோட்டாறு வந்து சேர்ந்தார். அங்கு சில நாட்கள் தங்கியிருந்து கடைசியாக நெய்யாற்றின் கரையை வந்து சேர்ந்தார். புலி வாதுக்கல் வேலாயுதன்[98] அவ்வூரின் முக்கிய பிரமுகர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அவரது தொடர்பு நாணு ஆசானுக்கு கிடைத்தது. சிறிது காலம் அங்கு தங்கியிருந்த நாணு ஆசான் தன் தாயின் உடல் நிலை மோசமானதை அறிந்து செம்பழந்தியில் உள்ள தன் வீட்டிற்கு சென்றார்.

நாணு ஆசான் தன் தாய்க்கு மருத்துவ சேவைகளைச் செய்தார். ஆனால் அது பலனளிக்காமல் நாணு ஆசானின் தாயார் இறந்தார். பின்னர் நாணு ஆசானின் தந்தை மாடன் ஆசான் நோயினால் பாதிக்கப்பட்டார்.இறுதியில் அவரும் மரணம் எய்தினார்.[99]

## இளமைக் கால இலட்சியம்

நானுவின் இளமைக் கால இலட்சியமாக இன்பத்தை புதுப்பிக்க வேண்டிய மனிதன் துன்பத்தை ஏன் சந்திக்கிறான். துன்பம் எந்நிலையில் மனிதனுக்கு வருகின்றது. இந்த துன்பத்தை மட்டும் அனுபவிக்காமல் இருந்தால் அவனது வாழ்க்கை முழுமையான இன்பத்தை அடையும் என்பதாகும்.[100] அப்படியானால் இந்த துன்பம் எந்தெந்த வகையில் மனிதனின் வாழ்க்கையை பாதிக்கிறது என்பதனை தீவிரமாக ஆராய நானு இளம் வயதிலேயே எண்ணினார்.

## தவவழிபாடு

பெருநல்லி கிருஷ்ணன் வைத்தியர் நானு ஆசானின் பழைய தோழர்.[101] அவரைக் காண நானு ஆசான் சில நேரங்களில் செல்வதுண்டு. பெருநல்லி கிருஷ்ணன் வைத்தியர் ஒரு மிகச் சிறந்த சமஸ்கிருத புலமை கொண்டவர் ஆவார். கிருஷ்ணன் வைத்தியர் நானு ஆசானுக்கு குஞ்சன் பிள்ளை சட்டம்பி சுவாமி அவர்களை அறிமுகம் செய்து வைத்தார்.[102] குஞ்சன் பிள்ளை சட்டம்பி சுவாமிகள் நல்லகுணங்கள், மனித நேயம், இறை வழிபாடு ஒழுக்கநெறி இவைகளை மையமாகக் கொண்டு குஞ்சன் பிள்ளைக்கு சட்டம்பி என பெயரிட்டனர்.[103]

இவர் பின்னாளில் சண்முக தாஸன் என்று அறியப்பட்டார்.[104] ஆனால் இவர் உண்மையான பெயர் அய்யப்பன் ஆகும்.[105]

நானு ஆசான், குஞ்சன் பிள்ளை சட்டம்பிள்ளை சுவாமிகளை சந்தித்த முதல் சந்திப்பிலேயே நெருங்கிய பிரியமுடியாத ஆத்ம நண்பர்கள் ஆனார்கள். மனித இனத்தை ஆட்டிப்படைக்கும் ஏற்றத் தாழ்வுகளைப் போக்கும் வழி கண்டறிய இருவரும் ஒன்றிணைந்து முயற்ச்சித்தனர். நானு ஆசானை சட்டம்பி சுவாமிகள். ஸ்ரீ அய்யாசுவாமி அவர்களின் வீட்டிற்கு அழைத்துச் சென்றனர்.[106]

இவர் இயர்பெயர் சுப்பராய பணிக்கர், அவர் தமது குடும்பத்தினரும் திருவனந்தபுரத்தில் வாழ்க்கையை துவக்கினர். சிறந்த சிவபத்தரான இவர் நாளடைவில் திருஅய்யாவு சுவாமிகள் எனும் புகழ்பெற்ற யோகியானார்.[107] அய்யாவு சுவாமிகளின் தொடர்பிற்கு பின் தான் நானு ஆசான் தவம் செய்வதற்கான வழிமுறைகள் வாய்ப்புகள் அறிந்து கொள்ளப்பட்டது.[108]

## புனிதப் பயணம்

மனித நேயத்தை மையமாகக் கொண்டு சேவை செய்ய வேண்டும் என்ற பரந்த நோக்கத்தோடு நானு ஆசானும், குஞ்சன் பிள்ளை சட்டம்பியும் அய்யா சுவாமிகளிடம் ஆசி பெற்றுக் கொண்டு தனது புனிதப் பயணத்தைத் தொடர்ந்தனர். ஆங்காங்கே உள்ள பக்தர்கள் முன் வந்து இவர்களுக்குத் தேவையான வசதிகளையும். உதவிகளையும் செய்து கொடுத்தனர். பல கிராமங்களுக்கு இருவரும் கால்நடையாக பயணம் மேற்கொண்டனர் குறிப்பாக கோயில்களில் தங்கி, அவ்விடத்திலே மக்களை சந்தித்து போதனை செய்தும் மனித வாழ்வியலைப் பற்றி விளக்கியும் வந்தனர்.[109] இப்படிப் பல்வேறுப் பகுதிகளுக்கும், புண்ணிய இடங்களுக்கும் கால்நடைப் பயணத்தை மேற்கொண்ட இவ்விருவரும் கடைசியாக கன்னியாகுமரியை அடைந்தனர்.

## குகையில் தவமிருத்தல்

தமிழகத்தில் உள்ள கன்னியாகுமரிக்கு ஐந்து கி.மீ தூரத்தில் பனை மரங்கள் அடர்த்தியாக கொண்ட இடம். பாறையில் உருவான மலைப்பிரதேசம் மருத்துவாமலை[110] என்றழைக்கிப்படுகிறது. அந்த மலையின் உச்சியில் அமைந்துள்ளது பிள்ளைத் தடம்[111] என்ற குகை இந்த குகையின் முன்பாகம் கடலை நோக்கி அமைந்துள்ளது. இதனால் தூய்மையான காற்றினைச் சுலபமாக பெறமுடியும்.

கடற்கரையின் பக்கத்தில் இருந்தாலும் சூறாவளிக்காற்று தியானத்தில் இருக்கும் நேரத்தில் பாதிப்பு தராத வகையில் பிள்ளைத்தடம் குகை பாதுகாப்பான முறையில் அமைந்துள்ளது.[12]

இங்கு தவம் செய்வதற்கு தேவையான அடபதியன் கிழங்கு, சாதாவேரி, காட்டுக் கொடி போன்ற பல வகையான கிழங்குகள் இயற்கையாகவே கிடைக்கின்றன. இங்கு ஊற்றிலிருந்து வரும் நீரானது குடிப்பதற்கு ஏற்றவகையில் சுத்தமாக உள்ளது. இப்படி பிள்ளைத்தடம் எனும் குகையானது தனித்து அனைத்து இயற்கை வசதிகளையும் கொண்டதாக அமைந்த காரணத்தால் நாணு ஆசான் குஞ்சன் பிள்ளை சட்டம்பி ஆகியோர் இந்த இடத்தை சென்றடைந்தனர்.

இவர்கள் இந்த குகைக்கு 1882 ஆம் ஆண்டிற்க்குப் பின் வந்தனர்.[13] இந்த இடத்தில் நாணு ஆசான் தவம் இருக்க முன் வந்து விட்ட காரணத்தால் இவருடன் தொடர்ந்து பயணத்தை மேற்கொள்ள முடியாது என்று நினைத்து குஞ்சன் பிள்ளை சட்டம்பி, நாணு ஆசானிடம் விடை பெற்று சென்று விட்டார்.

பிள்ளைத்தடம் குகையில் தனிமையில் தவத்தை மேற்கொண்ட நாணு ஆசானுக்கு மனித வாழ்வில் ஏற்பட்டு வரும் உண்மை நிலைகளை தனிமையின் தவத்தின் வாயிலாக அறிய முடிந்தது. இதை அவர் இயற்றிய பாடல் வரிகளின் மூலம் அறியலாம்.

“பெருங்கானல் பரப்பினிலே பாய்ந்துவரும் ஆற்றின்
பேரொலி போல் அகச் செவியில்இன்பஒலி கேட்கும்
அருள் ஞான நாதத்தின் ஆன்ம ஒளி காணும்
அப்பேற்றை அடைந்தமுனி ஆகிடவே வேண்டும்”[14]

“ஆயிரமாயிரம் பரிதி ஒருருக் கொண்டாற் போல்
அறிவென்னும் பரமான்மா ஒளி வீசி நிற்கும்
மாயையெனும் காரிருட்டு மறைக்க முயன்றாலும்
மறைக்குமிருள் தனையழித்துச் சுடர் வீசும் ஞானம்”[115]

“உண்மையினைப் பலவாக வேற்றுமைதான் எண்ணும்
ஒன்றாகக்கொள்ளுவதே ஒற்றுமையின் ஆற்றல்
உண்மை நிலைதனை உணர்ந்தே ஒற்றுமைக்குள்பன்மை
ஒடுங்குகின்ற யோகத்தில் ஊன்றிடுக சிந்தை”[116]

இதுவரை நாணு ஆசான் பக்தராக விளக்கி வந்தார். பிள்ளைத் தடம் குகையில் தவம் இருந்து அற்புதப் பேரொளியை பெற்று பின் ஸ்ரீ நாராயண குரு ஆனார்.[117]

## அருவிபுரம்

மருத்துவா மலைக் குகையிலிருந்து தெற்கு நோக்கி புறப்பட்ட ஸ்ரீ நாராயண குரு அடர்ந்த காட்டுப் பகுதியில் வாழ்ந்திட நினைத்து கேரளாவில் நெய்யாற்றங் கரையின் அருகில் உள்ள அருவிபுரம்[118] பகுதியில் தொடுகுத்தி[119] எனும் குகையில் தங்களானார்.

கொச்சப்பிள்ளை[120] என்பவரை சந்தித்தார். இவர் தான் ஸ்ரீ நாராயன குருவின் முதல் சீடர் ஆவார். அவர் பிற்காலத்தில் சிவலிங்கதாச சுவாமிகள் என்று அழைக்கப்பட்டார்.

## ஸ்ரீ நாராயண குருவின் முதல் புரட்சி

1884 ஆம் ஆண்டு அருவிபுரம் வந்த ஸ்ரீ நாராயண குரு 1904 வரை அங்கேயே தங்கி இருந்தார்.[121] பிராமணர்களால் மட்டுமே கோயில் பிரதிஸ்டை செய்ய முடியும் என்ற கருத்து நிலவிய நேரத்தில், மக்களின் வேண்டுகோளுக்கிணங்கி ஸ்ரீ நாராயண குரு சிவலிங்கபிரதிஸ்டை செய்தார்.

உன்னை மதிக்காத இடத்திற்குச் செல்வதை விட நீங்கள் சுதந்திரமாக வழிபடுவதற்கு ஒரு இடத்தை உருவாக்குவது தான் நல்லது என்றுரைத்தார்.[122] 1888 ஆம் ஆண்டு சிவராத்திரியன்று விடியற்காலை மூன்று மணியளவில் ஸ்ரீ நாராயணகுரு நெய்யாற்றின் கரை ஆற்றில் மூழ்கினார்.பின்னர் சிவலிங்க வடிவில் ஒரு கல்லுடன் வெளியே வந்தார். அந்த கல்லைக் கொண்டு கோயில் பிரதிஸ்டை செய்தார்.[123]

பொதுவாகக் கோயிலைக் கட்டிய பின்னர் தான் முறைப்படி விக்கிரகத்தைப் பிரதிஷ்டை செய்வார்கள். ஆனால் நாராயண குரு விக்கிரகத்தைப் பிரதிஷ்டை செய்த பின்னர் தான் அந்த இடத்தில் கோயில் கட்டப்பட்டது.[124]

இதை அறிந்த சவணர்கள், பிராமணர்களைக் கொண்டு தான் மூலவிக்கிரகத்தை பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்ற நெறிமுறை இருக்கும் போது நீங்கள் எவ்விதம் பிரதிஷ்டை செய்யலாம்? என்றனர்.[125] அதற்கு ஸ்ரீ நாரயண குரு நாம் பிராமணர் சிவனை பிரதிஷ்டை செய்யவில்லை நான் ஈழவ சிவனைத்தான் பிரதிஷ்டை செய்தோம் என்றார்.[126] அக்கோயிலில்,

“சாதிபேத மதத்துவேஷம்
ஏதுமின்றி அனைவரும்
சகோதரராக வாழ்கின்ற
வழிகாட்டி இடம் இது”[127]

என்று பச்சிலைகளால் கல்லில் எழுதி வைத்தார் ஸ்ரீ நாராயண குரு.

## தமிழ் பண்பாட்டு நெருக்கம்

ஸ்ரீ நாராயண குரு இளமைக் காலத்தில் மருத்துவா மலை செல்வதற்கு முன்பு இருந்தும். அருவிபுரத்தில் தங்கிய பின்பு இருந்தும் தமிழகச் சிந்தனையாளர்களை பற்றி நன்கு அறிந்து கொள்ள முடிந்தது.

காரைக்குடி, மதுரை, கும்பகோணம் மற்றும் திருச்செந்தூர் போன்ற சைவ ஆசிரமங்களுக்கு மரியாதை நிமித்தமாக நாராயண குரு அழைக்கப்பட்டார். நாராயண குரு சிவபுராணம் மற்றும் மாணிக்க வாசகர், அப்பர், சுந்தரமூர்த்தி, மற்றும் திருஞான சம்பந்தர் முதலியோர் படைப்புகளை நன்கு அறிந்து கொண்டார்.

மேலும் அவர் திருவள்ளுவரின் திருக்குறளை மொழி பெயர்ப்பு செய்தார். இராமலிங்க சுவாமிகளின் சமரசம் மற்றும் சமரச சுத்த சன்மார்க்க நிலையையும் அறிந்து கொண்டார்.[128] ஐந்து தேவாரப் பதிகங்களையும் மலையாளத்தில் மொழி பெயர்த்துள்ளார்.[129]

## ஸ்ரீ நாராயண தர்ம பரிபாலன யோகம்

ஸ்ரீ நாராயண குரு அருவிப்புரம் கோயிலில் வழிபட வருபவர்களை ஒருங்கிணைந்து தன் கொள்கைகளையும் போதனைகளையும் மக்களுக்கு பரப்ப " ஸ்ரீ நாராயண தர்ம பரிபாலன யோகம் " ( SNDP YOGAM ) என்ற அமைப்பை 1903 ஆம் ஆண்டு தொடங்கினார்.

கோல்கத்தாவில் உயர்கல்விப் படிப்பை முடித்து திரும்பிய குமரன்ஆசான் என்பவரை அந்த அமைப்பின் செயலாளராக நியமித்தார். மேலும் திருவனந்தபுரம், கொச்சின் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதியில் இருந்து தகுதியான உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டனர்.[130]

ஸ்ரீ நாராயண தர்ம பரிபாலன யோகத்தின் நிர்வாகிகளாக தீண்டாமை ஒழிப்பு மற்றும் மனித அடிப்படை உரிமைக்கு குரல் கொடுப்பவர்களும் மார்க்சிய சமவுடமை கொள்கையை ஏற்றுக் கொண்டவர்களும் இருந்தனர். அவர்கள் டாக்டர் பல்பு, குமரன் ஆசான், டி.கே.மாதவன், சி.வி.குஞ்சுராமன், மூலூர் பத்மநாப பணிக்கர்[131] ஆகியோர் மற்றும் கே.பி கய்யலாக்கல், சி.ஓ.மாதவன், கே. குமரன், எம்.கோவிந்தன், சகோதரன் அய்யப்பன் போன்றோர் ஆவர்.[132]

## தலைமை அலுவலகம் வர்கலைக்கு மாற்றுதல்

தொடர்ந்து தனது பயணத்தை மேற்கொண்டு அஞ்சு தேங்கு மற்றும் பெருங்கோட்டுகரா (1904), திருச்சூர்(1906), கண்ணனூர் (1907), தலைச்சேரி(1908), 1907 ஆம் ஆண்டு அருவிபுரத்தை விட்டு வெளியேறினார். கோழிகோடு மற்றும் மங்களூர் (1910) போன்ற ஊர்களில் கோயில்களை நிறுவினார்.

1912 ஆம் ஆண்டு சிவகிரி குன்றில் வர்கலையில் சாரதா தேவி (அறிவுக் கடவுள்) கோயில் கட்டினார். அன்றிலிருந்து ஸ்ரீ நாராயண தர்ம பரிபாலன யோகத்தின் தலைமையிடமாக அது செயல்படத் தொடங்கியது.[133] ஸ்ரீ நாராயண குருவினது கொள்கைகளைப் பரப்ப பல சன்யாசி சீடர்கள் இருந்தனர்.

அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்,

திவ்ய ஸ்ரீ சிவலிங்க தாச சுவாமிகள்
வைரவன் சாந்தி சுவாமிகள்
திவ்ய ஸ்ரீ சைதன்ய சுவாமிகள்
காசி சங்கரனாந்த கிரி சுவாமிகள்
நிச்சலதாஸ் சுவாமிகள்
அவனவஞ்சேரி மாதவனாந்தா சுவாமிகள்

இராம சுவாமிகள்

சேலம் சாந்தலிங்க சுவாமிகள்

திருப்பரங்குன்றம் சாந்தலிங்க சுவாமிகள்

அனுமான் கிரி சுவாமிகள்

மாம்பலம் வித்தியானந்த சுவாமிகள்

நரசிம்ம சுவாமிகள்

பண்டித ஜெகதீஸ்வரனந்தா சுவாமிகள்

பெரிங்கோட்டுக்கர வித்தியானந்த சுவாமிகள்

இராமனந்தா சுவாமிகள்

கிருஷ்ணானந்தா சுவாமிகள்

முனிவர சுவாமிகள்

சண்முகதாஸ சுவாமிகள்

அமிர்தானந்த சுவாமிகள்

குருபிரசாத சுவாமிகள்

குமார சுவாமி சன்யாசி

பூர்ணானந்தா சுவாமிகள்

தர்மதீர்த்த சுவாமிகள்

சத்திய விர்த சுவாமிகள்

நடராஜ குரு

சுவாமி ஏனஸ்ட் கேர்க்

சுபானந்த சுவாமிகள்

திவ்ய ஶ்ரீ கோவிந்தானந்த சுவாமிகள்

அச்சுதானந்த சுவாமிகள்

சங்கரானந்தா சுவாமிகள்

ஆனந்த தீர்த்த சுவாமிகள்

குமாரனந்தா சுவாமிகள்

ஶ்ரீ நாராயண தீர்த்த சுவாமிகள்

திஜானந்த சுவாமிகள்

பிரம்மானந்த சுவாமிகள்

கீதானந்த சுவாமிகள்

மாதவானந்த சுவாமிகள் ஆவர்.[134]

ஸ்ரீ நாராயண குரு 1926 ஆம் ஆண்டு"ஸ்ரீ நாராயண தர்ம சங்கம்"[135]என்ற சன்யாசி சங்கத்தை நிறுவி, அரசாங்கசட்டப்படி திருச்சூரில் பதிவு செய்யப்பட்டது இந்த அமைப்பின் மூலம் சன்யாசிகளுக்கான ஒழுக்க விதிகள் கற்றுத்தரப்பட்டது.[136]

போதாந்த சுவாமிகள், நடராஜகுரு இந்த தர்ம சங்கத்திற்கு ஆலோசகர்களாக ஸ்ரீ நாராயண குருவினால் நியமிக்கப்பட்டனர்.[137] 1923 ஆம் ஆண்டு 'ஸ்ரீ நாராயண குரு குலம்' என்ற அமைப்பை ஸ்ரீ நாராயண குருவின் ஆசீர்வாதத்துடன் ஆரம்பித்தார் நடராஜகுரு[138] இந்த அமைப்பு ஸ்ரீ நாராயண குருவின் கொள்கைகளையும் தத்துவங்களையும் மனித நேய இலட்சியங்களையும் நிறைவேற்றத் துவங்கப்பட்டது. இது உலக மக்களை இணைக்கும் மையமாக செயல்பட்டுக் கொண்டிருகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.[139]

## அத்வைத ஆசிரமம்

ஸ்ரீ நாராயண குரு சிவகிரியில் சில அமைப்புகளை ஏற்படுத்திய பின்னர் தனது இருப்பிடத்தை மாற்ற எண்ணினார். வடக்கு நோக்கி தனது பயணத்தை மேற்கொண்டார் அதன்படி சங்கரர் பிறந்த காலடிக்கு அருகில் ஆலுவா எனும் இடத்தில் 'அத்வைத ஆசிரமத்தை' 1913 ஆம் ஆண்டு நிறுவினார். ஒருமையை போற்றும் வகையிலும் சங்கரரை நினைவு கூறும் வகையிலும் ஆலுவா ஆசிரமம் அமைக்கப்பட்டது.[140] இங்கு தான் 1924 ஆம் ஆண்டு சர்வ மத மாநாட்டை ஸ்ரீ நாராயண குரு அவர்கள் கூட்டினார்.[141]

மாநாட்டின் வரவேற்பு முகப்பில்,

'வாதம் செய்வதற்கும் வெற்றி கொள்வதற்கும் நாம் இங்கே கூடவில்லை தெரிந்து கொள்வதற்கும் தெரியப்படுத்துவதற்கும் தான் நாம் இங்கே கூடியுள்ளோம்'[142] என்ற நாராயண குருவின் கருத்தாக எழுதப்பட்டிருந்தது. இதன் நோக்கம் பல சமயங்களின் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதற்கும், மத சகிப்புத்தன்மையை ஏற்படுத்தவும் இந்த சர்வ மத மாநாட்டை ஸ்ரீ நாராயண குரு ஏற்பாடு செய்திருப்பதை அறிய முடிகிறது. இம்மாநாட்டிற்கு சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி சதாசிவஐயர் அவர்கள் தலைமை வகித்தார். பல மதங்களைச் சார்ந்த பிரதிநிகளும் கலந்து கொண்டனர்.[143]

## ஸ்ரீ நாராயண குரு மற்றும் மகாத்மா காந்தி சந்திப்பு

1924 ஆம் ஆண்டு ஸ்ரீ நாராயண குருவின் சீடரான டி.கே.மாதவன் தலைமையில் வைக்கத்தில் ஆலய நுழைவுப் போராட்டம் நடைபெற்றது.[144] இது வைக்கம் சத்தியாகிரஹா என்று அழைக்கப்படுகிறது.

ஓராண்டிற்கு மேல் இப்போராட்டம் தொடர்ந்து நடந்தது மகாத்மா காந்திஜி 1925 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 12ஆம் தேதி வைக்கம் போராட்டத்திற்கு சென்ற பின்னர் ஸ்ரீ நாராயண குருவை சிவகிரி ஆசிரமத்தில் நேரில் சந்தித்தார்.[145] பின்னர் நாராயண குருவைப் பற்றி மகாத்மா காந்தி அவர்கள் கூறியது.

எழில் மிகு திருவிதாங்கூர் ராஜ்யத்திற்கு வந்த போது புண்ணிய ஆத்மாவான ஸ்ரீ நாராயண குரு சுவாமிகளை தரிசிக்க கிடைத்த அரிய வாய்ப்பினை எனது வாழ்க்கையின் பெரும் பேறாக என்னுகிறேன். குரு சுவாமிகளின் மகத்துவத்தைப் பற்றி ரீஜண்ட் இளவரசி அம்மையாரும் என்னிடம் கூறினார்கள் என்று மகாத்மா காந்தி கூறியுள்ளார்.[146]

## ஸ்ரீ நாராயண குரு மற்றும் இரவீந்திரநாத் தாகூர் சந்திப்பு

இரவீந்திரநாத் தாகூர் அவர்கள் ஸ்ரீ நாராயண குருவை 1922 ஆம் ஆண்டு சிவகிரியில் சந்தித்தார்.[147] இருவரும் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.பின்னர் இரவீந்திரநாத் தாகூர் அவர்கள் ஸ்ரீ நாராயண குருவைப் பற்றி கூறும் போது நான் உலகில் பல இடங்களில் பயணம் மேற்கொண்டிருக்கிறேன். அப்போது பல சித்தர்களையும், மகரிஷிகளையும் தரிசிக்கும் வாய்ப்பு கிட்டியது. ஆனால் மலையாளத்தில் ஸ்ரீ நாராயண குருவைவிடச் சிறந்தவரையோ அல்லது அவருக்கு இணையான ஒரு மகா ஞானியையோ நான் எங்கும் பார்த்ததில்லை. ஏகாந்தத்தின் அழிவற்ற நெடுவானில் பதித்துள்ள அந்த மகானின் யோகக் கண்களும், சுயமாக தெய்வீக சைதன்னியம் ஒளிர்வீசும் அன்னாரின் முக தேஜசும் என்னால் ஒரு போதும் மறக்க இயலாது என்கிறார்.[148]

மகாத்மா காந்தி மற்றும் இரவீந்திரநாத் தாகூரின் கருத்துகள் மூலம் நாம் ஸ்ரீ நாராயண குருவின் பெருமையை அறிய முடிகின்றது.

## படைப்புகள்

1. விநாயகாஸ்டகம்
2. வாசு தேவாஸ்டகம்
3. விஷ்ணுவாஷ்டகம்
4. ஸ்ரீகிருஷ்ணதர்சனம்
5. சிவப்பிரசாத பஞ்சகம்
6. சதாசிவதர்சனம்
7. சிவசதகம்
8. அர்த்தனாரீஸ்வர தவம்
9. மனனா தீதம்
10. சிச்ஜட சிந்தனம்

11. குண்டலினி பாட்டு

12. இந்திரிய வைராக்கியம்

13. சிவஸ்தவம் (பிரபஞ்ச திஷ்டி)

14. கோலத்திர ஸ்தவம்

15. ஸோ அனுபவ வீதி

16. பிண்ட நன்னி

17. சிதம்பராஸ்டகம்

18. தேவாரப் பதிகங்கள்

19. ஒரு தமிழ் ஸ்லோகம்

20. தேவீ ஸ்தவம்

21. மண்ணந்தல தேவீ ஸ்தவம்

22. காளீநாடகம்

23. ஜனனீ நவரத்ன மஞ்சரி

24. பத்ரகாளியாஸ்டகம்

25. தேவி பிரணாம தேவியாஷ்டகம்

26. சண்முக ஸ்தோரம்

27. ஷண்முக ஸ்தவம்

28. ஷண்மாதுர ஸ்தவம்

29. சுப்ரமண்ய கீர்த்தனம்

30. நவமஞ்சரி

31. குஹாஷ்டகம்

32. பாகுலேயாஷ்டகம்

33. ஶ்ரீசுப்ரமணிய ஸ்துதி

34. ஆத்மோபதேச சதகம்

35. அத்வைத தீபிகா

36. அறிவு

37. தெய்வ தசகம்

38. தர்சன மாலா

39. பிரம்ம வித்யா பஞ்சகம்

40. நிர்விருதி பஞ்சகம்

41. ஸ்லோக கீர்தி

42. வேதாந்த ஸீத்ரம்

43. ஹோம மந்திரம்

44. ஜீவகாருணிய பஞ்சகம்

45. அனுகம்பாதஸகம்

46. ஜாதி நிர்ணயம்

47. ஜாதி லட்சணம்

48. சதாசாரம்

49. முனிசர்ய பஞ்சகம்

50. ஆஸ்ரமம்

51. தர்மம்

52. சரம ஸ்லோகங்கள்

போன்றவை ஸ்ரீநாராயணகுருவின் படைப்புகள் ஆகும்.

## மொழி பெயர்ப்புகள்

1. திருக்குறள்

2. ஈஸாவாஸ்ய உபநிஷத்

3. ஒரு ஆசாம்ஸயும் ஸமஸ்ய புராணாவும்

4. ஜிஜ்ஜட சிந்தனம்

5. தெய்வ சிந்தனம் பாகம் 1&காலம் 2

6. கெத்ய பிராத்தனை

7. ஆத்ம விலாசம்

போன்றவை ஸ்ரீ நாராயண குருவால் மொழி பெயர்க்கப்பட்டவையாகும்.[149]

**மஹா சமாதி**

1928 ஆம் ஆண்டு செப்டம்பர் 20 ஆம் நாள் தனது 73 ஆம் வயதில் வர்கலையில் ஸ்ரீ நாராயண குரு மஹா சமாதி அடைந்தார்.[150] அவர் கடைசியாக பாடிய பாடல் அவர் இயற்றிய தெய்வ சதகத்தின் கடைசி பாடல்களைப் பாடினார் .

"ஆழபேனு நின் மஹாஸ்ஸா
மாழியல் ஞங்ஙளாகளே
ஆழாணம் வாழமை நித்யம்
வாபூணம் வாழணம் ஸீகம்"[151].

## குறிப்புகள்

1. "திரு அருட்பிரகாச வள்ளலார் வரலாறு", தெய்வநிலைய வெளியீடு, ப. 13.

2. ஊரன் அடிகள்,"இராமலிங்க அடிகள் வரலாறு", ப. 6.

3. மேலது ., ப. 6.

4. "திருஅருட்பிரகாச வள்ளலார் வரலாறு", தெய்வ நிலையம், ப. 13.

5. ஊரன் அடிகள், "இராமலிங்கஅடிகள் வரலாறு", ப. 9.

6. "திருஅருட்பிரகாச வள்ளலார் வரலாறு", தெய்வ நிலையம், ப. 13.

7. "ஜோதி வழியில் வள்ளலார்", இராமலிங்க பணிமன்றம், ப. 3.

8. ம.பொ.சிவஞானம்,"வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு", ப. 44–45.

9. "திருஅருட்பிரகாச வள்ளலார் வரலாறு", தெய்வநிலையம், ப. 28

10. "திருவருட்பா", பா. 4133.

11. "திருஅருட்பிரகாச வள்ளலார் வரலாறு", தெய்வ நிலையம், ப. 14.

12. ஊரன் அடிகள்,"இராமலிங்க அடிகள் வரலாறு", ப. 21.

13. மேலது ., ப. 21.

14. மேலது ., ப. 22.

15. மேலது ., ப. 22.

16. "திருஅருட்பிரகாச வள்ளலார் வரலாறு", தெய்வநிலையம், ப. 16.

17. "திருவருட்பா", பா. 8.

18. ஊரன் அடிகள்,"இராமலிங்க அடிகள் வரலாறு", ப. 8.

19. மேலது ., ப. 39.

20. ஊரன் அடிகள், "இராமலிங்க அடிகள் வரலாறு", ப. 52.

21. "திருஅருட்பிரகாச வள்ளலார் வரலாறு", தெய்வ நிலையம், ப. 19-20.

22. ஊரன் அடிகள்,"இராமலிங்க அடிகள் வரலாறு", ப. 86.

23. "திருஅருட்பிரகாச வள்ளலார் வரலாறு", தெய்வ நிலையம், ப. 21.

24. மேலது ., ப. 21.

25. மேலது ., பா. 3392.

26. "திருவருட்பா", பா. 3452.

27. ஊரன் அடிகள்,"இராமலிங்க அடிகள் வரலாறு", ப. 93.

28. மேலது ., ப. 118.

29. மேலது ., ப. 144.

30. "திருஅருட்பிரகாச வள்ளலார் வரலாறு", தெய்வநிலையம், ப. 22.

31. மேலது ., ப. 3.

32. மேலது ., ப. 5.

33. "திருவருட்பா"., பா. 3467.

34. "திருஅருட்பிரகாச வள்ளலார் வரலாறு", தெய்வநிலையம், ப. 22.

35. மேலது ., ப. 23.

36. மேலது ., ப. 24.

37. ஊரன் அடிகள்,"இராமலிங்க அடிகள் வரலாறு", ப. 279-280.

38. "திருஅருட்பிரகாச வள்ளலார் வரலாறு", தெய்வநிலையம், ப. 279-280.

39. மேலது . , ப. 26.

40. மேலது ., ப. 27.

41. "திருஅருட்பிரகாச வள்ளலார் வரலாறு", தெய்வநிலையம், ப. 27.

42. மேலது ., ப. 27-28.

43. மேலது ., ப. 28.

44. மேலது ., ப. 28-29.

45. மேலது ., ப 29-30.

46. ஊரன் அடிகள்,"இராமலிங்க அடிகள் வரலாறு", ப. 618.

47. மேலது ., ப. 619.

48. மேலது ., ப. 619.

49. மேலது ., ப. 619.

50. மேலது ., ப. 620.

51. மேலது ., ப. 620.

52. "திருவருட்பா", பா. 5818.

53. ஊரன் அடிகள், "இராமலிங்க அடிகள் வரலாறு", ப. 620.

54. ம.பொ.சிவஞானம்,"வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு", ப. 384.

55. Sathya Bai, Sivatas, "Narayana Guru, The Social Philosopher'',p.14.

56. அம்பேத்கர்பிரியன், "ஸ்ரீநாராயணகுரு வாழ்க்கை வரலாறு", ப. 48.

57. Sathya Bai, Sivatas, "Narayana Guru, The Social Philosopher'', p.13.

58. மேலது ., ப. 4.

59. மேலது ., ப. 11.

60. Nataraja Guru, "Life and Teaching of Sree Narayana Guru", p.387.

61. Moorkothu Kumaran,"The Biography of Sree Narayana Guru", p.49.

62. S.Omana,"Philosophy of Sree Narayana Guru", p.3.

63. Nithya Chaithanya Yathi, "Narayana Guru", p.6.

64. Vijayalayam vijyakumar, "Sree Narayana Guru–A Critical study", p.44.

65. S.Omana, "Philosophy of Sree Narayana Guru", p.3.

66. Sathya Bai, Sivatas,"Narayana Guru, The Social Philosopher", P. 20.

67. S.Omana, "Philosophy of Sree Narayana Guru", P.6.

68. Moorkothu Kumaran, "The Biography of Sree Narayana Guru", p.51.

69. VijayalayamVijayakumar,"Sree Narayana Guru–A Critical study," p.45.

70. அம்பேத்கர்பிரியன்,"ஸ்ரீநாராயணகுரு வாழ்க்கை வரலாறு", ப. 23.

71. பருத்தியூர் கே.சந்தானராமன்,"ஸ்ரீநாராயணகுரு", ப. 32.

72. S.Omana,"Philosophy of Sree Narayana Guru", p.8.

73. அம்பேத்கர் பிரியன், "ஸ்ரீநாராயணகுரு வாழ்க்கை வரலாறு", ப. 26.

74. மேலது ., ப. 27.

75. S.Omana,"Philosophy of Sree Narayana Guru", p.8.

76. Moorkkothu Kumaran,"The Biography of Sree Narayana Guru", p.54.

77. பருத்தியூர் கே.சந்தானராமன், "ஸ்ரீநாராயணகுரு", ப. 18.

78. அம்பேத்கர்பிரியன்,"ஸ்ரீநாராயணகுரு வாழ்கை வரலாறு", ப. 22.

79. மேலது ., ப. 39.

80. Moorkkothu kumaran, "The Biography of Sree Narayana Guru", p.59.

81. அம்பேத்கர்பிரியன், "ஸ்ரீ நாராயணகுரு வாழ்கை வரலாறு", ப. 39.

82. S.Omana, "Philosophy of Sree Narayana Guru", P.9.

83. மேலது ., ப. 9.

84. பட்டத்தி மைந்தன்,"மகான் ஸ்ரீ நாராயணகுரு", ப. 10.

85. Moorkkothu Kumaran, "The Biography of Sree Narayana Guru", p.862.

86. பருத்தியூர் கே.சந்தான இராமன்,"ஸ்ரீ நாராயணகுரு", ப. 28.

87. மேலது ., ப.30.

88. அம்பேத்கர்பிரியன்,"ஸ்ரீநாராயணகுரு வாழ்க்கை வரலாறு", ப. 52.

89. Moorkkothu Kumaran, "The Biography of Sree Narayana Guru", p.64.

90. அம்பேத்கர்பிரியன்,"ஸ்ரீ நாராயணகுரு வாழ்க்கை வரலாறு", ப. 46.

91. மேலது ., ப. 47.

92. பட்டத்திமைந்தன், "மகான் ஸ்ரீ நாராயண குரு", ப. 31.

93. பருத்தியூர் கே. சந்தன ராமன், " ஸ்ரீ நாராயணகுரு", ப. 36.

94. பட்டத்திமைந்தன், " மகான் ஸ்ரீநாராயணகுரு", ப. 34.

95. அம்பேத்கர்பிரியன்,"ஸ்ரீ நாராயணகுரு வாழ்க்கை வரலாறு", ப. 48.

96. மேலது ., ப. 48.

97. பருத்தியூர் கே. சந்தான ராமன்,"ஸ்ரீநாராயணகுரு", ப. 37.

98. அம்பேத்கர்பிரியன்,"ஸ்ரீநாராயணகுரு வாழ்க்கை வரலாறு", ப. 50.

99. மேலது ., ப. 52.

100. மேலது ., ப. 55.

101. P.K.Sasitharan Nair, "Philosophy of Sri Narayana Guru", p.23.

102. Moorkkothu Kumaran,"The Biography of Sree Narayana Guru", p.67.

103. Nithya Chithanaya Yathi, "Narayana Guru", p.XIII.

104. Moorkkothu Kumaran, "The Biography of Sree Narayana Guru", p.68.

105. S.Omana, "Philosophy of Sree Narayana Guru", p.15.

106. Vijayalayam Vijayakumar, "Sree Narayana Guru - A Critical Study", p.54.

107. அம்பேத்கர் பிரியன்,"ஸ்ரீநாராயணகுரு வாழ்க்கை வரலாறு", ப. 61.

108. மேலது ., ப.63.

109. மேலது ., ப. 63.

110. S.Omana,"Philosophy of Sree Narayana Guru", p.17.

111. பட்டத்தி மைந்தன்,"மகான் ஸ்ரீநாராயணகுரு", ப. 50.

112. Moorkkothu Kumaran, " The Biography of Sree Narayana Guru", p.71.

113. அம்பேத்கர் பிரியன்," ஸ்ரீநாராயணகுரு வாழ்க்கை வரலாறு", ப. 65.

114. "ஆத்மோபதேச சதகம்", பா. 16.

115. மேலது ., பா. 35.

116. மேலது ., பா. 38.

117. அம்பேத்கர்பிரியன்,"ஸ்ரீநாராயணகுரு வாழ்க்கை வரலாறு", ப. 67.

118. Nithya Chithanya yathi,"Narayana Guru", p.XV.

119. பட்டத்திமைந்தன்,"மகான் ஸ்ரீநாராயணகுரு", ப. 41.

120. அம்பேத்கர் பிரியன்,"ஸ்ரீநாராயணகுரு வாழ்க்கை வரலாறு", ப. 69.

121. S.Omana,"Philosophy of Sree Narayana Guru'', p.25.

122. அம்பேத்கர்பிரியன்,"ஸ்ரீநாராயணகுரு வாழ்க்கை வரலாறு", ப. 72.

123. Moorkkothu Kumaran,"The Biography of Sree Narayana Guru", p.83.

124. பட்டத்தி மைந்தன்,"மகான் ஸ்ரீநாராயணகுரு", ப. 42.

125. மேலது ., ப. 42.

126. Moorkkothu Kumaran, "The Biography of Sree Narayana Guru", p.85.

127. S.Omana, "Philosophy of Sree Narayana Guru", p.70.

128. மேலது ., ப. 25-26

129. பருத்தியூர் கே.சந்தான இராமன்,"ஸ்ரீநாராயணகுரு", ப. 88.

130. Moorkkothukumaran,"The Biography of Sree Narayana Guru", p.139.

131. S.Omana,"Philosophy of Sree Narayana Guru", p.28.

132. அம்பேத்கர்பிரியின், "ஸ்ரீநாராயணகுரு வாழ்க்கை வரலாறு", ப. 76.

133. S.Omana,"Philosophy of Sree Narayana Guru", p.28.

134. அம்பேத்கர்பிரியன்,"ஸ்ரீநாராயணகுரு வாழ்க்கை வரலாறு", ப. 78.

135. Moorkkothukumaran,"The Biography of Sree Narayana Guru", p.178.

136. S.Omana,"Philosophy of Sree Narayana Guru", p.39.

137. பட்டத்தி மைந்தன்,"மகான் ஸ்ரீநாராயணகுரு", ப. 83.

138. அம்பேத்கர்பிரியன்,"ஸ்ரீநாராயணகுரு வாழ்க்கை வரலாறு", ப. 79.

139. S.Omana,"Philosophy of Sree Narayana Guru", p.31.

140. பருத்தியூர் கே.சந்தானஇராமன்,"ஸ்ரீநாராயணகுரு", ப. 66.

141. அம்பேத்கர்பிரியன்,"ஸ்ரீநாராணகுரு வாழ்க்கை வரலாறு", ப. 94.

142. பட்டத்தி மைந்தன்,"மகான் ஸ்ரீநாராயணகுரு", ப. 87.

143. அம்பேத்கர்பிரியன், "ஸ்ரீநாராயணகுரு வாழ்க்கை வரலாறு", ப. 102.

144. S.Omana,"Philosophy of Sree Narayana Guru", p.34.

145. பருத்தியூர் கே.சந்தான ராமன்,"ஸ்ரீநாராயணகுரு", ப. 78.

146. அம்பேத்கர்பிரியன்,"ஸ்ரீநாராயணகுரு வாழ்க்கை வரலாறு", ப. 123.

147. பட்டத்தி மைந்தன்,"மகான் ஸ்ரீநாராயணகுரு", ப. 98.

148. அம்பேத்கர்பிரியன்,"ஸ்ரீநாராயணகுரு வாழ்க்கை வரலாறு", ப. 123-124.

149. மேலது ., ப. 137-138.

150. மேலது ., ப. 172.

151. S.Omana,"Philosophy of Sree Narayana Guru", p.45.